ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ  அதிவிசேஷமானது
අංක 1805/27 - 2013 අප්‍රේල් 10 වැනි බදාදා - 2013.04.10
*1805/27 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : சிய/பிசெ/ஆசங்/05/2/இ/4/எல்ஏ.
காணி அமை. இல. : 03/ஜே/78/பி/412.

மொனராகலை - இரத்தினபுரி , வெள்ளவாய - மட்டக்களப்பு வீதியில் 174/8 பாலத்திற்கு உட்பிரவேசிக்கும் பாதைக்கான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

ஊவா மாகாணத்தில், மொனராகலை மாவட்டத்தில், சியம்பலாண்டுவ பிரதேச செயலாளர் பிரிவில், உல்விட்ட கிராமத்தில் அமைந்துள்ள மொனராகலை நில அளவையாளரினால் தயாரிக்கப்பட்ட இறுதி வரைபட இல. 54 ஏ, இடைநில அளவைப்பட இல. 24 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணி :

**1. துண்டு இல. 250**

காணியின் பெயர் : பஹலவெலே யாய ; உரிமை கோருபவர் : வண. மேல்ல கம சோமானந்த சுவாமி அவர்கள், கொட்டியாகொட விகாரை, தொம்பகஹவெல ; விஸ்தீரணம் : 0.0313 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு சியம்பலாண்டுவ பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு மே மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஏ. எம். நந்தசிரி,
பிரதேச செயலாளர்,
சியம்பலாண்டுவ.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
சியம்பலாண்டுவ,
2013.03.18.

04 - 770

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.